திருநெல்வேலி, தமிழ்ப் பாதுகாப்புச் சங்க வெளியீடு

# : இந்தி :
# எதிர்ப்புப் பாடல்கள்

திருநெல்வேலி
தமிழ்ப் பாதுகாப்புச் சங்கம்
1938

விலை பை 6

## காலத்துக் கேற்ற அரிய நூல்

## தமிழ் மக்கட்குரிய சிறந்த நூல்

# இராமாயண உள்ளுறை பொருளும்
# தென்னிந்திய சாதி வரலாறும்

# A Critical Review of the Story of Ramayana

AND

# An Account of South Indian Castes (in Tamil)

காலஞ் சென்ற ஆசிரியர், பி. சுந்தரம் பிள்ளை (M.A.)
அவர்களுடைய கருத்தைத் தழுவி,
ராவ் சாஹிப். வே. ப. சுப்பிரமணிய முதலியார், G. B. V. C,
அவர்களால் எழுதப்பட்டு,
காலஞ் சென்ற ஜே. எம். நல்லசாமி பிள்ளை (டிஸ்டிரிக்டு முன்சீபு)
அவர்கள் பாயிரத்துடன் வெளிவந்துள்ளது

**பொருளடக்கம் :-**

பாயிரம் (ஆங்கிலம்)
முன்னுரை (தமிழ்)
முகவுரை (தமிழ்)

1-வது அதிகாரம்: இராமாயண காலத்துத் தென்னிந்திய சாதி நிலைமை

2-வது ,, இராமாயண காலத்துக்கு முந்திய காலத்துத் தென்னிந்திய சாதி நிலைமை.

3-வது ,, இராமாயண காலத்துக்குப் பிந்திய காலத்துத் தென்னிந்திய சாதி நிலைமை.

4-வது ,, சாதி யிலக்கணமும் தென்னிந்திய சாதி நிலைமையும்.

இதன் விலை அணா 8.

இப்போது குறைந்த விலை அணா 6.

கிடைக்குமிடம் } சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
கீழ் ரத வீதி, திருநெல்வேலி.
கிளைநிலயம்:-6, பவழக்காரத் தெரு, சென்னை.

# தமிழ்ப்பெருமையும் இந்தி எதிர்ப்பும்

## என்னருமைத் தமிழர்களே !

### 1. எழுந்து வாரீர்

என்னருமைத் தமிழர்களே, யினிது வாரீர் !
எல்லாரும் ஒருகுலமா யிணைந்து வாழ்வோம் !
புன்னினைவும், புல்லடிமைத் தொண்டுஞ் சூது
பொறாமைகளுஞ் சாதிமதப் பொருபொருப்பும்
தன்னலமுந் தவிர்த்தெல்லா மனமுமொன்றித்
தன்னறிவுக் கடவுளையே சார்ந்து வாழ்வோம் !
முன்னேறு முலகின்முன் னணி வகிப்போம்,
முயற்சியணிந் தெழுந்திருமின், உறுதிகொண்டே !

### 2. செல்வத் தமிழீர்

என்னில்லம் விளக்கெரியத் தீயிரந்தால்,
'ஏன்மூடா' வென்னாரோ வுலகோர் ? சொக்குப்
பொன்னிருக்கப் புதைந்துள்ளே, பிறர்பால் ஐயம்
புகுவாரோ ? புகலிருக்கப் புறம்போவாரோ ?
அன்னையுமை யழைக்கின்றாள் அமுதமேந்தி;
அருளடியார் இசைக்கின்றார் ஆர்வங்கூறி;
உன்னரிய நாகரிகம் ஒளிரப் பெற்றும்
உறங்குதிரோ தமிழர்களே, யுண்மை காணீர் !

### 3. தமிழர் பழம்புகழ்

முன்னாளில் உலகமெலாங் கப்ப லூர்ந்தோம்;
முச்சங்கக் கலை வளர்த்தோம்; தொழில்வளத்தாற்
பொன்னாறு நாட்டினிலே பொங்க வைத்தோம்;
புவியரசர், கவியரசர், புலனை வென்ற
தன்மயமாந் தவத்தரசர், தறுகண் வீரர்,
தணலுங்கற் பரசிகளுந் தழைக்க வாழ்ந்தோம் !
அன்னபுகழ் இந்நாளும் அடைய வல்லோம்;
அயராம லெழுந்திடுமின் அருட்பணிக்கே !

## 4. தமிழ்ச் செல்வம்

தங்கமணிப் படுகையிலே முத்திறைத்துத்
தவழமுத வெள்ளமென நடைகுலுங்குஞ்
சங்கமணிச் செல்வங்கள் மல்கு நாட்டீர்,
தமிழ்மறையைப் புவிக்கீந்த செந்நாப் போதர்,
துங்கமணிக் கவியரசன் கம்பன், செவ்வி
துலங்குமிளங் கோவடிகள் சொல்லை யுண்ட
சிங்கமணித் தமிழர்காள், கலையினுச்சிச்
சிகரத்திற் செயக்கொடியை நாட்ட வாரீர்!

## 5. தமிழ்ப் புரவலர் ஈகை

வீரமுர சணை யுறங்கு மோசுகீரன்
விழிக்கும்வரை வெண்கவரி வீசிநின்றான்
சேரலிரும் பொறை, யரிசிற் கிழார்வாய் வந்த
செழுந்தமிழுக் கரியணையைப் பரிசி லீந்தான்!
பாரியொரு முல்லைக்குத் தேரை யீந்தான்
பரிசிலீந் திளந்திரையன் பாடல் பெற்றான்.
கோரிவந்த புலவனுக்குத் தலைகொடுக்கக்
குறித்தகும ணன்கொடையின் கொற்ற மென்னே

## 6. இளஞ்சிங்கங்காள்!

முக்கனியின் முத்தமிழைச் சுவைத்தறிந்து,
மூவ்வேந்தர் முற்காலம் போற்றி னார்கள்.
இத்ததிநந் தமிழ்வருந்து மிடர்கள் கோடி.
எழுந்திருங்கள் வீறுடனே யிளஞ்சிங் கங்காள்!
புத்தமுத வெள்ளம்போல் அன்பு பாய்ச்சிப்
புகழேறிப் புதுமலர்கள் பூத்துக் காய்க்க
வித்தமிந்த தமிழ்ப்பயிரை நினைவாய்க் காப்போம்!
நீடோங்கித் தமிழ்மரபு நிலவ மாதோ!

## 7. தமிழர் போர் வீரம்

கடற்படைகொண் டிலங்கைவென்று, தக்கிணத்தைக்
கைப்பற்றி வங்கர்கோ சலரைவென்று,
வடநாட்டார் அடிபணிய வன்போர் செய்து,
வாகையுடன் புலிக்கொடியை யிமயமேற்றி,
அடற்கரிய தமிழ்வீரப் படையான், பொன்னி
யணைகட்ட மன்னர்பணி கொண்ட மன்னன்
சுடர்மணிப்பூம் புகாராண்ட கரிகாற் சோழன்
றுலங்கியநன் னுதித்த சூரச் சேய்காள்!

## 8. தமிழர் வெற்றி

கண்ணகிக்குப் பத்தினிக்கற் கொணரப் போந்தோன்
கனகவிச யர்செருக்கைக் கடிந்து போரில்,
விண்ணெட்ட வெற்றிமுர சொலித்த நாட்டீர்,
வியன்கப்பற் படையூர்ந் திராசராசன்
கண்ணெட்டு நாடெல்லாங் கைக்கொண் டாண்டான்.
கலைச்சாலை, அறச்சாலை, கவின்செய்கோயில்
விண்ணெட்டப் புகழ்விளங்கச் செய்தான்; அன்னான்
வெற்றிநினைந் தாவேசம் பெற்றுவாரீர்!

## 9. தமிழ் வேந்தர்

தொக்கெழுவர் பெரும்படைப்போர் தொடுக்க நக்குத்
துரும்பென்ன மதித்தவரைத் தலையாலங்கான்,
எக்கிமடித் தெமனுக்கே விருந்தளித்தான்,
இளம்வீர னெடுஞ் செழியன். இமயமீதே,
உக்கிரபாண் டியன்மீனக் கொடியுயர்த்தான்.
உலகுபுகழ் அனிபாலன், அகுஸ்தன், ஸீஸர்
சிக்கந்தர், செமிராமி, தெரயஸ் தம்மிற்
சிறந்திடுநல் லறவேந்தர் செழித்த நாட்டீர்!

## 10. வேந்தர் அறவுணர்ச்சி

குற்றமிலாக் கோவலனைக் கொன்றேன், செங்கோல்
கோடியதென் றுயிர்விட்டான் செழியர்கோமான்!
கற்றறிபார்ப் பான்மனையைக் காத்த மாறன்
கதவிடித்த பிழைக்காகக் கைகுறைத்தான்,
கொற்றத்தேர்க் காலிலொரு கன்று சாகக்
குமரனையே அனபாயன் பலிகொடுத்தான்.
பொற்றிருவா ராய்ச்சிமணி புலம்ப நீதி
புரிந்த தமிழ் வேந்தர்புகழ் புகலப் போமோ?

## 11. தமிழ்ப் பெண்டிர்

கண்ணனலால் வேவெரித்தாள் கைலை யாளி.
கற்பனலாற் கண்ணகியோர் நகரெரித்தாள்;
ஒண்மணிச்சேய் போர்க்குடைந்தால், உண்டமார்பை
உடனறுப்பே னென்றுளோர் தமிழ்வீரத் தாய்!
நண்ணனைக்கா தற்கனலாற் கலந்தாள் கோதை;
காசினிக்கே யறமளித்தாள் கலைதேர் ஔவை.
எண்ணமுருக் கிசைபிழிந்தாள் காரை யம்மை
இனியதமிழ்ப் பெண்ணமுதின் இயல்பைக்கேளீர்!

## 12. தமிழர் பொதுநோக்கு

நந்தனார், திருப்பாணர், நம்பு சாம்பன்,
நன்முத்தி பெற்றகதை நாடுசொல்லும்.
அந்தணர் அறவோரே யென்னுங் கொள்கை
அன்புசிவம், அன்பு மத மென்னு முண்மை,
தந்ததமிழ் மரபினரே, தவழ்ந் தருட்பா
சமதருமப் பயிர்வளர்க்குந் தவநாட்டீரே,
எந்தமதச் சாதியிறு மாப்பு மிங்கே
இல்லாமல் உள்ளொன்றி யினிது வாழ்வோம்!

## 13. தமிழர் அஞ்சாநெஞ்சம்

நெற்றிக்கண் காட்டிடினுங் குற்ற மென்ற,
நிகரில்லா நக்கீரர் நிலவு நாட்டீர்!
கொற்றசிவ னடிக்கல்லாற் குனியோ மியார்க்குங்
குடியல்லோம் கூற்றஞ்சோம் எனுஞ்சொற்கோனைப்
பெற்றதமிழ் நாட்டீர்காள், பிள்ளை ஞானப்
பெரியமறை பாடிதமிழ்ப் பெருமை நாட்டக்
கற்றதமிழ் நாட்டீர்காள், கலங்கா துள்ளம்
கடமையினைப் போற்றிடுவோம். கடவுள் காப்பே!

## 14. தமிழர் ஆண்மை

இன்னமுதத் தமிழர்களே யிசைந்து வாரீர்,
ஏங்காம லேமாந்து தூங்கிடாமல்,
உன்னதமாய்த் தலைநிமிர்ந்து நடப்போ மிந்த
வுலகினிலே பிறநாட்டார் உழைப்பா லுற்ற
மன்னிசையை நாமடைய மயக்கமேனோ?
மனிதனியற் றியதையொரு மனிதன் செய்வான்.
அன்னைவெறி பிடித்திடுமின் ஆண்மை கொண்டோர்
அடைவார்கள் வெற்றியிதி லைய முண்டோ?

## 15. வேற்றுமை யொழிமின்

சாதிமதச் சச்சரவை யொழித்திடுங்கள்!
சகிப்புடனே சமரசமும் போற்றிடுங்கள்!
பேதபுத்தி விலக்கிடுங்கள். பெண்ணுண் கண்போற்
பிரியாது நல்லறிவைப் பெற்றிடுங்கள்!
ஆதிபரா பரன்கோயில் அவனியெல்லாம்.
அவன்சக்தி விளையாட்டே யகில வாழ்க்கை.
வேதமெலாந் தன்னறிவின் விளக்க மென்றே,
விஞ்ஞானத் தாலறிந்து விளங்கீர் மாதோ!

## 16. தமிழீர், ஒற்றுமை!

கயிர்திரித்துத் தன்கழுத்தில் மாட்டிக்கொண்டே,
கதறுகின்ற பேதையைப்போற் காயவாழ்வின்
உயர்நலத்தை யுணராம லும்மக்கே கேடாம்
ஊறுகளைச் செய்யாதீர்; உலகனைகம்;
பெயர்வடிவச் சாயத்தைப் பெரிது பண்ணிப்
பிரிவினையாம் வஞ்சப்பேய்க் கிடந்தராதீர்!
உயிர்க்குயிரா மொருபொருளை யுள்ளுணர்ந்தே.
ஒற்றுமையாய் வாழ்ந்திடவே கற்றூர் மேலோர்!

## 17. தமிழகம்—கோயில்

பண்பரவுந் தமிழகமே நமது கோயில்.
பார்க்குமுயிர் நம்முயிராம்; பார்வாழ் வெல்லாம்
விண்பரவத் தமிழ்வெற்றிக் கொடிபிடித்து,
வினைவேள்வி செய்திடவே விளைந்த தென்போம்!
கண்பரவுந் திசையெல்லாங் கல்வி, செல்வங்
கலை, தொழில், வாணிபம்பெருகக் கருத்துவைப்போம்.
தண்கடந்து தமிழ்வேத முரசமார்க்கத்
தலைநிமிர்ந்து வாருமினே தமிழ்நாட்டீரே!

## 18. வாழும் வகை!

தமிழ்நாட்டுக் கல்விமுறை தமிழர் கையில்,
தாய்நாட்டுத் தொழில்க ளெலாந் தனயர்கையில்;
தமிழர்வா ணிபமெல்லாந் தமிழர் கையில்;
தமிழ்த்துறையி லியங்குவது தமிழர் கப்பல்;
தமிழ்ச்சமு தாயப்பணியுந் தமிழர் கூட்டால்;
தமிழ்நாடு தமிழர்க்கே; தமிழர் சேமந்
தமிழர்களின் ஒற்றுமையே; தமிழர் பேச்சு
தனித்தமிழே யெனில் வாழ்வு தழைப்பதாமே!

## 19. பிறநாட்டைப்போல் முன்னேறுக!

சப்பானுஞ் செர்மனியு மிங்கிலாந்தும்,
சமதர்ம ரஷியாவும், அமெரிக்காவும்
இப்படியே முயற்சியினுல் இசைபெற்றோங்கும்
இயல்பறிந்தும் இழிநிலையி லுறங்குவீரோ,
ஒப்பில்லாக் கலைபயில்வோம்; புலவரோங்க
வுரிமைதொழில் வாணிபத்தாற் குபேர ராவோம்;
இப்பாரி லிணையில்லா நாட்டா ரென்றே
யிசைபெறுவோந் தமிழர்களே யிசைந்து வாரீர்!

## 20. தமிழ்த்தவ சக்தி

ஆவியினு மரியதமி ழன்பீர், வாரீர்
ஆர்வத்தா லற்புதங்க ளுலகிற் செய்வோம்!
தேவாதி தேவர்களுந் தமிழே பேசச்
செய்திடுவோம்; விண்ணரசைத் திகழவைப்போம்!
சீவனிலே பேரின்பச் சிலிர்ப்பைக் காண்போம்;
செந்தமிழே முத்தினிலே சேர்க்குமென்போம்,
யாவர்க்கு மரியதவ சக்திக் காந்தம்
அனல்வீசுந் தமிழகத்தைப் போற்றி செய்வாம்!

## 21. தமிழர் பெருமை

தனக்கியல்பாம் பெருமையினைத் தானறிந்து,
தனனகத்துத் தவக்கனலைத் தான் வளர்த்தே,
எனக்குனக்கென் றில்லாம லெல்லாம் மொன்ருய்
இயல்வளத்தைப் பகுத்துண்ணும் இல்லந் தாங்கி,
மனக்கினிய கல்விசெல்வ மல்கி வாழ்வு
வளமோங்கி யுலகிற்கு வன்ருெண்டாற்றி,
இனிக்குமொழி தமிழென்னு மேற்ற மோங்கி
யின்புறுவோ மன்பிறைவ னருள்க மாதோ!

—புதுவை சுத்தானந்த பாரதி

---

# தாயைப் போற்றுங்கள்!

[ராகம்—நாதநாமக்கிரியை; ஆதி தாளம்]

தாயைப் போற்றுங்கள்—நந்தமிழ்த்
தாயைப் போற்றுங்கள்—பைந்தமிழ்த்—தாயைப்

தூய தொன் மொழி தொட்டிலில் யாம் கற்ற
நேய நன் மொழி நித்திய வான் மொழித்—தாயைப்

1. மண்ணிற் றலைசிறந்த வான்கவி கம்பர்
மக்களறம் வகுத்த வள்ளுவத் தேவர்
ஒண்மணி வாசகர் கண்மணி வள்ளலா॥
உத்தமராகிய இத்தகை யோர்க் குற்ற—தாயைப்

2. தேவர் விருப்புறு மூவர் மெய்ஞ் ஞானத்
தேற்றந் தருந்தாயு மானவர் தொண்டர்
யாவருக்குந் தலையாய கிழார், சங்கம்
ஏவிய கீரர்இப் பாவலரைத் தந்த—தாயைப்

3. பொய் கொண்ட பூமியில் மெய்கண்ட தேசிகர்
புங்கவர் வான்றிரு மந்திரந் தந்தவர்
வைகுண்டங் காட்டிய வான்சட கோபர்
மன்குல சேகரர், இனனவரைப் பெற்ற—தாயைப்

4. மற்றை மொழிகளைப் போல் மாள்வதோ நம் மொழி
மற்றெம் மொழிகட்கும் ஆதியாம் பொன் மொழி
இற்றைக்கும் பேசுவார்க் கின்பந் தருந் தமிழை
இந்தி மொழி யுதைந்து பிந்தித் தள்ளாமல்—தாயைப்.

—தி. இலக்குமண பிள்ளை.

---

[கிளிக்கண்ணி மெட்டு]

1. தந்தி முகக் கடவுள் தம்பி குகக் கடவுள்
முந்திடும் மந்திரத்தைச்—சிவன்பால்
மொழிந்த சொல் பசுந்தமிழே.

2. பலன் பெற்றவர் சரிதம் பாடிடுஞ் சேக்கிழார்க்கு
உலகெலா மென வெடுத்துச்—சிவனார்
உதவிய சொல் தமிழே.

3. கற்பு நடன மிடுங் காரைக்கா லம்மை யாரின்
அற்புதப் பாடலெல்லாம்—சிவனார்
அணியும்பூந் தமிழ் மொழியே.

4. வருடத்துக் கோர் கவி வழுத்திய திருமூலர்
திருமந்திரம் மூவாயிரம்—அதுவும்
தீஞ்சுவைத் தமிழ் மொழியே.

5. தொழுதிடுஞ் சேரனுக்குத்தொண்டனிடங் கொடுத்த
வழுவிலாத் திருமுகமும்—சிவனார்
வரைந்ததுந் தமிழ் மொழியே.

6. நாடிய பொருள்பெற நல்லதருமி யிடம்
பாடியே தானீந்த—சிவனார்
பாசுரம் பசுந் தமிழே.

7. சுகப்படும் அறுபது சூத்திரமாகவே
அகப்பொரு ளிலக்கணத்தை—சிவனார்
அருளின மொழி தமிழே.

8. வளம் பெறும் வாதவூர் மாணிக்க வாசகர்
விளம்பினார் தமிழ்க் கோவை—சிவனார்
விரும்பினார் தானெழுத.

9. அவனிபுகழ் தென்னாட்டுக் காதரவாய், மெய் கண்டார்
சிவஞான போதமெனும்—ஒருநூல்
செய்ததுந் தமிழ் மொழியே.

10. மடத்தினுமா பதியார் மதித்திடப் பெற்றா ணிடங்
கொடுத்தமெய்ச் சீட்டுக் கவி—சிவனார்
குறித்ததுந் தமிழ் மொழியே.

11. வற்றிய இந்தி மொழி வாய்க்கா லசுத்தப் புனல்
நற்றமிழ்ச் சுவை நீர் போல்—நமது
நாவினி லினியாதே.

---

[தேயிலைத் தோட்டத்திலே என்றமெட்டு].

1. செந்தமிழ்த் தொண்டர்களே! நமது
தேசத்துக்கே பெரு மோசத்தைச் செய்திட
வந்திடும் இந்தியுடன்—நேரில்
வாது செய்வீர்களே தீது வராமலே—செந்தமிழ்

2. சுகம் பெறும் மக்கட் கெல்லாம்—தமிழ்ச்
சொன்னயச் சோறாட்டும் அன்னை வருந்தாமல்
பகையை யொழிப்பீர்களே—சோம்பிப்
படுத்துறங் காது விழித்தெழுவீர்களே—செந்தமிழ்

3. தக்க பெருங் கதையை—மதத்
தந்தி முகன் கொம்பால் முந்தி வரைந்ததும்
அக்கரையோ டரனார்—அன்பா
யழுதவர் பாசுரம் எழுதிடப் பெற்றதும்,

4. அருள் நிறை சம்பந்தரால்—எலும்
பானது பெண்ணுரு வானதுவும் முன்னம்
திருமறைக் காட்டினிலே—மிகச்
சிறந்த கதவந் திறந்ததுவும், அஞ்சும்.

5. இருட்டினிலே சிவனைத் தன்
இட்டம் போலே தூது விட்டதுவும், நீரில்
மருவு முதலையினால்—முன்பு
மாண்டநற் பாலகன் மீண்டதுவும், பழந்

6. தமிழ்மொழி, யாலல்லவோ ? அதைச்
சற்றேனுஞ் சிந்தையில் உற்றுநோக்கா தென்னே
சமயத் தமிழ் கெடுக்க வருந்
தந்திர இந்தியை வந்தவழி யோட்டும்—செந்தமிழ்

7. மின்னுந் தொல் காப்பியமும்—எங்கும்
மெய்ப்புகழுள்ள சிலப்பதி காரமும்
தன்னிகர் நன்னூலாம்—தென்சொல்
சாகர மாமணி மேகலையும்—பொதுப்

8. பலன் முறை நாலடியார்—குறள்
பத்துப் பாட்டோடு கலித்தொகையும், சைவத்
தலைமை பெற்ற மூவர்—இசைச்
சாரங் கலந்த தேவாரங்களும், திரு

9. வாதவூ ரன்ப ரெனும்—மணி
வாசகரின் திருவாசகம் கோவையும்
வேதமொழிச் சேக்கிழார்—அன்பு
விரியுந் திருத்தொண்டர் சரிதங்களும், புகழ்

10. விளங், கருண கிரியார்—வேலன்
விருப்புற வோதிய திருப்புகழும், தொழுந்
தலங்களில் ஆழ்வார்கள் பாடிய
தாய் மொழியாந் திருவாய் மொழியும், ஆதி

11. மெய்யாந் தமிழாலன்றோ—அன்றி
வேற்று மொழியாலோ ? சாற்றுவீர் ! சாற்றுவீர் !
தெய்வத் தமிழ் மொழிபோல்—நெஞ்சம்
தேறு மொழியது வேறுண்டோ கூறுவீர்—செந்தமிழ்

—அடுக்குமொழி பி. ஆவுடையப்பன்.

---

# தமிழ் வீறு

[இந்த விருத்தங்களை இந்துஸ்தான் தோடி, கல்யாணி, மோகனம், காம்போதி, பைரவி, தோடி, தன்யாசி, ஆரபி முதலிய ராகங்களில், ஆதிதாளம் போட்டுப் பாடலாம்.]

## 1. தொன்மொழியரசி

இன்னிசை யணிந்த பொன்னிளஞ் செல்வி,
இனிமையே தன்பெய ராளுள் !
மன்னுல கெல்லாம் வணங்கிடத் தக்க
பொதுமறை யருளிய வாணி !
பன்மொழிக் குயர்ந்த தொன்மொழி யரசி,
பரமனின் வரம்பெற்ற புதல்வி,
தன்னிக ரற்ற தமிழெனும் அமுதத்
தாய்மல ரடிபணிந் துய்வாம் !

## 2. தமிழன்பு

அன்புளே தமிழாம், ஆர்வமுந் தமிழாம்,
ஆருயிர்த் துடிப்பெலாந் தமிழாம்,
என்புளே தமிழாம், 'இருக்கிறேன்' என்றுள்
இதயத்திற் பேசிடுங் கடவுள்
இன்புளே தமிழாம், இரத்தமுந் தமிழாம்,
இசைப்பதும் புரிவதுந் தமிழாம்,
நண்புளே தமிழாம், செந்தமிழென்னு
நறவினை யருந்திய நமர்க்கே !

## 3. அருட்பணிக் கெழுமின் !

சிங்கம்போ லெழுந்து வாருங்கள், அன்புச்
செல்வர்காள் அன்னையின் பணிக்கே,
தங்கம்போற் பொலியுந் தளரிள முதியாள்
புகழினைச் சகமெலா முரைப்போம் !
செங்கதிர் பரவுந் திசையெலாந் தமிழின்
சீர்முர சொலித்திடச் செய்வோம் !
அங்கையில் உழைப்பும், ஆண்மையை மனத்தும்
அணிந்துடன் அருட்பணிக் கெழுமின் !

## 4. தமிழுறுதி

எண்ணுறும் போது, தமிழையே யெண்ணீர்,
இசைத்துழித் தமிழையே யிசைப்பீர் !
பண்ணுறும் போது தமிழ்ப்பணி தனையே
பழுதறப் பண்ணியின் புறுவீர் !
உண்ணுறும் போதும், உறங்கிடும் போதும்,
உயிருளந் துடித்திடும் போதும்.
கண்ணினு மரிய தமிழையே கருதிக்
காரிய வுறுதிகொண் டெழுமின் !

## 5. தமிழ் நலம் புரிமின்

செல்வர்க ளெல்லாந் தமிழ்ச்செல்வம் வளர்மின் !
திறங்கொண்ட வீரவா லிபர்கள்
அல்லொடும் பகலும் அருந்தமி ழாசிக்
கற்புதக் கோயில்க ளமைமின் !
கல்வியுந் தொழிலுங் கைவந்த புலவர்
கவினுறுங் கலையணி செய்மின் !
நல்லன புரிய நாடுவோர் தமிழின்
புகழையே நலமெனப் புரிமின் !

## 6. தலைநிமிர் தமிழா !

எத்தனை சித்தர்; எத்தனை வேந்தர்,
எத்தனை யருச்சுடர்க் கவிகள்,
எத்தனைக் கலைஞர் இலங்கினர் இங்கே ;
எங்கவர் உலகிசை முன்னே ?
தத்தம திசையே முழக்குனர் அயலார் ;
தனிப்புகழ் பலப்பல படைத்தும்,
செத்தவர் போல விருப்பது நலமோ ?
சிரமுயர்ந் தெழுந்திரு தமிழா !

## 7. கவியணி

வள்ளுவர், கம்பர், வள்ளலார், தாயு
மானவர், வியாசர், வான்மீகி,
ஒள்ளிய காளி தாஸன், வர்க்கிலியன் 1,
ஓமர் 2, மாசேக்ஸ்பியர் 3, தாந்தே 4

---

1. Virgile. 2. Homer. 3. Shakespear. 4. Dante.

தெள்ளிய தாகூர், திருவெலாங் கூட்டித்
தேவரி னமுதினும் உள்ளம்
அள்ளூறுங் கவிதை யணிகளைச் சூட்டி
யன்னையைப் பணிகுவோம் தமிழா!

## 8. தமிழர் பொதுநெறி

உயிர்க்குல மெல்லாம் உலவிடுங் கோயில்;
உலகெலாந் திருவிளை யாடல்;
அயர்விலா தன்பு செய்தலே கடமை;
யாதினுங் கடவுளை யுணர்ந்தே,
துயர்கெட யாங்கும் இன்பமே துளிர்க்கத்
தொண்டுகள் புரிதலே தொழுகை;
இயற்கையோ டிசைந்த வாழ்க்கையே வாழ்க்கை,
இதுவுன் றன் பொதுநெறி தமிழா!

## 9. ஒரு குலவுணர்வு

சள்ளைகள் பெருக்குஞ் சாதியுஞ் சமய
வேற்றுமைச் சண்டையும் வேண்டாம்.
கள்ளமில் உள்ளம் கடவுளின் இருக்கை;
கருணையே வேதத்தின் எல்லை;
தெள்ளறி வுடனே கீரிய மேலோர்
செப்பிய சுத்தசன் மார்க்கம்
ஒள்ளிய ராகப் பயின்றொரு குலமாய்
ஓங்குவோம் சமரஸத் தமிழா!

## 10. சேர்ந்து வாழுவோம்

இந்திய ரேனுங் கிறிஸ்தவ ரேனும்,
சைனர், இஸ்லாமியர், பௌத்தர்,
எந்தநற் சமயம் வந்தவ ரேனும்,
எங்கெங்குந் தமிழரோர் குடும்பம்.
அந்தமில் வெவ்வே றுடைக ளணிந்தும்,
ஆண்பெண்ணின் அகத்துடிப் பொன்றே;
நந்தமிழ் இரத்தங் கலந்தவ ரெல்லாம்
ஞாலத்திற் சேர்ந்துமுன் செல்வோம்!

## 11. தமிழ்க்கொடி யுயர்க !

தமிழரின் சாதிப் பூசல்கள் ஒழிக !
சமரச வுணர்ச்சிமே லெழுக !
தமிழரின் வீரத் தகைசுடர்ந் தொளிர்க !
தமிழகச் சரிதைமாண் புறுக !
தமிழிசை கேட்ட வுலகெலாம் இன்பத்
தாண்டவம் புரிக ! நற்றமிழர்
தமிழுக்கே யுயிர்ப்போம் ! தமிழ்முர சார்ப்போம் !
தமிழ்க்கொடி யுயர்ந்திடத் தழைப்போம் !

## 12. விடுதலைக் கதிர்

ஆண்களின் ஆண்மை மலையென வளர்க !
பெண்களின் கற்பனல் ஒளிர்க !
வீண்மடப் பழக்கம் வீழுக ! வாழ்வில்
விளங்குக விடுதலைக் கதிரே !
பூண்களிற் பொருந்தும் பொன்னென வுண்மைப்
பொருளினிற் பொருந்துக மாந்தர் !
காண்புவி யுயிர்கள் அனைத்தையும் உலவுங்
கோயிலாய்க் கண்கள்கா ணுகவே !

## 13. பொதுமை

மனிதர்க்கு மனிதர் இல்லையிங் கடிமை ;
மாநில வளமைகள் பொதுமை;
சனியெனப் புகுந்த வேறுபா டெல்லாஞ்
சாம்பிட வொற்றுமை தணல்க !
இனிதுள மொன்றி யனைவரும் அன்னைக்
கின்னுயி ருடலென வாழ்வோம் !
கனிபல வேனுங் கனிமர மொன்றே !
கடம்பல, காற்றொன்றே யன்றோ !

## 14. எழுமின்

தமிழகங் கண்ட தத்துவப் பெரியார்,
தரைவளர் விண்ணென வேண்டும் !
தமிழரைச் சுற்றித் தவத்திருக் காந்தம்
தகவெனக் காந்திட வேண்டும் !

தமிண் மொழி கேட்டோர் அமுதமும் இதன்முன்
சப்பெனச் செப்பிட வேண்டும்!
தமிழிளஞ் சிங்க வீரர்காள் எழுமின்!
தமிழ்மணிக் கொடியினைத் தாங்கி!

## 15. தமிழ்ப்பற்று

சுற்றிலும் வடுகர், கன்னடர், வங்கர்,
கூர்ச்சரர், கேரளர், நாட்டுப்
பற்றுத லுடனே யிந்தியைப் பரப்பும்
பண்பினர் உழைப்பினைப் பார்மின்!
பெற்றதாய் தன்னைப் பெருமைசெய் யாத
பேதையும் உலகினில் உண்டோ?
கற்றதன் பயனுந் தமிண்மொழி யான
கடவுளைப் பணிதலே தமிழா!

## 16. தமிழ் வெற்றி

வானுற வளருந் தமிழிசை முன்னே
மாநிலம் வணங்கிட வேண்டும்,
தேனுறுந் தமிழார் திருவிசை முழங்கித்
தேவர்கள் நடமிட வேண்டும்.
மானுறு பாகன் மகள்கொலு விருக்க,
மன்னர்கள் பணிசெய வேண்டும்.
யானுறும் பிறவி மகிழுமக் கணமே;
அன்னையின் வெற்றியோங் குகவே!

எந்தாய் வாழ்க!

—புதுவை சுத்தானந்த பாரதி.

---

## தமிழ்மொழிச் சிறப்பு

['கல்லார்க்கும் கற்றவர்க்கும்' என்ற மெட்டு]

1. தள்ளவொண்ணுத் தமிழ் மொழியே
சபையிற் பேசும் மொழியே
சகத்திலுள்ள மொழிகட் கெல்லாம்
தலைசிறந்த மொழியே

கள்ள மில்லா மொழியே இன்பங்
காட்டுந் தமிழ் மொழியே
கல்வியிலே சிறந்த கம்பர்
கவியுந் தமிழ் மொழியே
உள்ளபடி விள்ளு மதிப்
பாவலர்க ளெல்லாம்
உலகி லென்று பிறந்ததெனெ
வுணர்ந்திடாத மொழியே
தெள்ளு தமிழ்த் தாய் மொழியே
சீர் கொடுக்கும் மொழியே
தீட்டு தமிழ் முனிவரின் தென்
னூட்டிஇுற்ற மொழியே.

2. உன்னதமாம் ஆதிமொழி
உயர்ந்த தமிழ் மொழியே
உறுதி மொழி நமது நாட்டுக்
குரிய தமிழ் மொழியே
சென்னை முதல் குமரிவரை
திருநடன மொழியே
தெட்சணத்துக் கிச்சை மொழி
தெய்வத் தமிழ் மொழியே
நன்னயமிகுந்த மொழி
நமது தமிழ் மொழியே
நால்வர் வாக்கி னெழுந்த மொழி
ஞானத் தமிழ் மொழியே
தன்னுடைமைத் தாய் மொழியே
தனித்தியங்கும் மொழியே
தமிழ் மொழியின் பெருமையை யான்
சாற்றிடவுந் தரமோ.

---

[மாயப்ர பஞ்சத்தில் என்ற ‘சிந்தாமணி’ மெட்டு]

தேசத்திலே யுயர் வானது தாய் மொழி
செந்தமிழே நமக்கேற்ற நற்சீர் மொழி
சிறுவர்கள் நாடிப் படித்திடில் வாழ்வாம்
தீனமதா மொழி யோதிடில் தாழ்வாம்
தினந்தொறும் யாரு மறக்க லாகாதே
சீரிதழ்ப் பூமலர் மேவிடுந் தாயார்
செய்ய திருவடிச் சேவை செய்வோம் கனிச்—செந்தமிழே
செம்மை யிலங்கிடும் இன்மொழி யோர்ந்து

உண்மையா யாவரும் அம்மையென் றோதும்
தென்மொழி மாதா நன்மை யாகச்
சிந்துடன் நாங் கும்மிச் சந்ததமும் பாடிச்
சித்தங் களித்து வாழ்த்தே கூறுவோம் கனிச்—செந்தமிழே

---

## தமிழ் நாட்டுக் கும்மி.

1. நற்புனிதத் தமிழ் நேயர்களே ! பாடும்
நாற்கவியில் வல்ல வாணர்களே !
கற்புமிகு மட மானிகளே ! சொந்தம்
காட்டுந் தமிழபி மானிகளே !

2. ஆசையுட னிந்தத் தேசத்தைப் பார்க்க
அயல்மொழி தான் வந்துலா விடினும்
நேசமிகுந்திடுந் தாய்மொழிக்குச் சற்று
நேரா யொரு போதும் மாகாதே

3. இன்ப நிறைந்த தமிழ் நாடு—வளம்
என்றுஞ் சிறந்த தமிழ் நாடு
தென் பொதியைமலை வாழுங் குறுமுனிச்
செந்தமி ழோங்குந் தமிழ் நாடு.

4. சாதுக்கள் கூடுந் தமிழ்நாடு—நல்ல
தண்ணீ,ர ளிக்குந் தமிழ் நாடு
காதுக் கினிமை புகட்டியே நல்வழி
காட்டும் பெருமைத் தமிழ்நாடு.

5. தமிழ்த் தென்றல் வீசும் வளநாடு—மணி
தமனிய மேவும் புகழ்நாடு
இமயமலை முதல் குமரிநகர் வரை
இன்சொ லிலங்குந் தமிழ் நாடு.

6. தண்டமிழ் வாய்ந்த திருஞான சம்பந்தர்
சைவம் வளர்த்த தமிழ்நாடு
தொண்டர்தந் நாதனை யாலால சுந்தரர்
தோழமை கொண்ட தமிழ் நாடு.

7. தேவியாஞ் சீதையைத் தேடி வரும்படி
தென்னிலங் காபுரி மன்ன னிடம்
ஏவிடம் போதநு மானிடம் ராகவன்
ஏற்றமா யோதிய தாய்நாடு.

8 தேவரும் யாவருஞ் சேவை செய்யுமுமா
தேவியு மீசனும் வேலவனும்
மூவருந் தோன்றிச்செங் கோல்கொண்ட கூடலை
முதன்மையாய்ப் பெற்ற தமிழ்நாடு.

9 மச்சக் கொடியும் புலிக்கொடியு முள்ள
மாறனுஞ் சோழனும் வீரமுடன்
மெச்சுந் திசையெங்கு மேகிப் புகழ்பெற்ற
மேன்மை வளருந் தமிழ்நாடு.

10 நன்னய மாக்கவி பாடிப் பிரானடி
நாடிய சங்கப் புலவர்களைத்
தன்னிடந் தாங்கிய தெய்வப் பலகையின்
தன்மை விளங்குந் தமிழ்நாடு.

11 தாசர்க ளாங்கவி வாணர்கள் வாக்கினில்
தங்கி யிலங்குந் தமிழரசி
தேச மெங்கும் ஏகச்சக்ரா திபத்தியஞ்
செலுத்திடு மேன்மைத் திருநாடு.

12 ஆதரவாகும் இயலிசை நாடக
மாகிய முத்தமிழின் னியல்பை
மூதறிவாளர்கள் வீதிதொறுஞ் சொல்லும்
முழக்கம் செழிக்குந் தமிழ்நாடு.

13 வள்ளுவ ரில்லற மெய்நாடு—கவி
வாணர்க்குப் பொன்மழை பெய்நாடு
அள்ளிக் கொடுத்த சடையப்ப வள்ளலின்
அன்பு பாராட்டுந் தமிழ்நாடு.

14 வாதம் புரிந்திட்ட வில்லியிடஞ்சந்த
வள்ளல் வெற்றி கொண்ட தென்னாடு
ஓதும் புலவர் மனத்தெழுங் கற்பனைக்
குள்ளடங்காத தமிழ்நாடு

15 தென்னவன் வாழ்க்கைத் துணைவியாம் பாண்டிமா
தேவியெனும் மங்கையர்க்கரசி
நன்னயமாகத் தன்னுன்னத பத்தியை
நாட்டிய சைவத் தமிழ்நாடு.

# தமிழ்ப் பாதுகாப்புக் கழக

## — வெளியீடுகள் —

க. கபிலரகவல் (குறிப்புரையுடன்)

உ. ஆபுத்திரனகவல் (குறிப்புரையுடன்)

தமிழர் சடங்குகளின்

ங. அழைப்பிதழ் எழுது முறை

தனிப் படி விலை பை 6

பேச்சு வழக்கிலுள்ள

ச. வடசொல் தமிழ் அகரவரிசைச் சுருக்கம்

திருவாட்டி தி. நீலாம்பிகை அம்மையார் இயற்றியது.

(இதன்கண் ஏறக்குறைய 1100 வடசொற்கள் அவற்றிற்கு நேரான தமிழ்ச் சொற்களுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன) தனிப் படி விலை அணு 1

தமிழ்ச் சொற்களைப்

ரு. பிழை நீக்கி எழுது முறை

பள்ளிக்கூட மாணவர் முதல் தமிழ்மக்கள் ஒவ்வொருவரிடமும் இந்நூல் இன்றியமையாது இருக்கவேண்டியது. தனிப் படி விலை அணு 1.

சு. மக்கட் பெயர் அகரவரிசை

தனிப் படி விலை அணு 1

எ. தமிழ்நாட்டுப் பழமொழி யகரவரிசைச் சுருக்கம்

தனிப்படி விலை அணு 1

குறிப்பு:—1 முதல் 7 வெளியீடுகளையும் 6½ அணு தபாற்றலை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

**தமிழ்ப் பாதுகாப்புக் கழகம்,**

156, பவழக்காரத் தெரு, சென்னை.

The Sengundha Mithran Press, Madras.